ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ விஜயதே   ஸ்ரீமன் மூலராமோ விஜயதே   ஸ்ரீ குருராஜோ விஜயதே







ஸ்ரீமத் பாவிசமீர ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளின் மற்றும் கலியுக காமதேனு கல்பதரு ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்

அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்

வெளியிட்டவர்கள் : ஸ்ரீ குருராஜ பாதயாத்திரை சங்கம்

ஸ்ரீ எல்.வி.கணேஷ் ஜோயிஸ, நிறுவனர், நிர்வாகி மற்றும் அனைத்து பாதயாத்திரைகளிலும் பங்குவகித்தவர்
'விஸ்வஸ்ரீ' எண்.67ஏ, உதயநகர், கேசவபுரம், ஹூப்பள்ளி - 580 023, கர்னாடகா. தொலைபேசி: 0836-2288623.
கைப்பேசி: 9448194085, 9110473048, 8931987414, 7159815276, 8050931568

பெங்களூரு கிளை : ஸ்ரீ கே. நாகராஜராவ். 'ஸ்ரீரக்ஷா', எண் 42, ஸ்ரீனிவாச நகர், 2வது குறுக்குத் தெரு, பனசங்கரி 3ம் ஃபேஸ். தொலைபேசி: 080-26696121, 9482566363

தமிழில் மொழிபெயர்த்தவர்: 'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன், கைப்பேசி: 89044 58276

விலை: ரூ.40.00



உடுப்பியின் ஸ்ரீ பேஜாவர அதோக்ஷஜ மடத்தின் ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வேஷ தீர்த்த ஸ்ரீபாதங்களவர் மற்றும் இளையவர் ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வபிரசன்ன தீர்த்த ஸ்ரீபாதங்களவர் (ஆண்டு 2009 நவம்பர்) இருவரும், நம் 10வது ஆண்டு ஸ்ரீக்ஷேத்திரம் சோதே பாதயாத்திரையில் பங்குபெற்றபோது எடுத்த படம்.



ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுவித்யேந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர் மற்றும் ஸ்ரீ விஸ்வகுருப்ரிய ஸ்ரீபாதங்களவர் (ஆண்டு 2011-டிசம்பர்) இருவரும், நம் 12ம் ஆண்டின் ஸ்ரீக்ஷேத்திர சோதே பாதயாத்திரையில் பங்குபெற்றபோது எடுத்த படம்.



ஸ்ரீமத் பாவிசமீர ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளின்

அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்

இயற்றியவர்:

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் மடத்தின் ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுஷமீந்திர தீர்த்தரின்
அருளாசிபெற்ற **ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுவித்யேந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர்**

புத்தக அறிமுகம்: ஹுப்பள்ளி ஸ்ரீ குருராஜ பாதயாத்திரை சங்கத்தினர், அவர்களது 12ம் ஆண்டின் பாதயாத்திரையினை ஸ்ரீ க்ஷேத்திரம் சோதே ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளின் சன்னிதிக்கு தேதி 26-12-2011 முதல் 2-1-2018 வரை ஸ்ரீபாதங்களவரின் தலைமையில், ஸ்ரீமத்பாகவத தாத்பர்ய நிர்ணய சப்தாஹத்துடன் பாதயாத்திரை செய்த சமயத்தில் வெளியிடப்பட்ட புத்தகம்.



கலியுக காமதேனு கல்பதரு ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்

அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்

இயற்றியவர்:

ஸ்ரீமத் அப்பண்ணாசார்யரின் அவதாரம் என்று கருதப்படும் மற்றும்
ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் அன்பிற்குரியவரான **ஸ்ரீகிருஷ்ணாவதூதர்**

உரை எழுதியவர்: **பண்டிதர் டாக்டர். நாராயணாசார்ய தூளகேட, ஹுப்பள்ளி**



அருளுரை

ப்பள்ளியின் திரு. கணேஷ ஜோயிஸ அவர்கள், ஒரு பாதயாத்திரை சங்கத்தை துவக்கி, 12 ஆண்டுகளாக, ஸ்ரீ சொந்தா
பாத்திரையை நடத்திவருகிறார். 12வது முறை சோதே யாத்திரை 2012வது ஆண்டு நடைபெற்றது. அந்த சமயத்தில்
மூலமாக பாகவத பிரவசனத்தை நடத்தினார். அப்போது பாதயாத்திரை சமயத்தில் ஜோயிஸ தம்பதியினர் பாராயணப்
துவந்த கிருஷ்ணாவதூதர் இயற்றிய ராகவேந்திர அக்ஷரமாலிகா ஸ்தோத்திரத்தினால் ஈர்க்கப்பட்டு, ஸ்ரீ வாதிராஜரின்
ர மாலிகா ஸ்தோத்திரத்தை இயற்றினோம். 'பாலகன கல பாஷெ ஜனனியு கேளி சுக படுவந்தெ' என்று சொல்வதைப
ல, இதுவும் இயற்றப்பட்டது. நம் மற்றும் ராஜரின் நடுவில் மட்டுமே இது இருக்கவேண்டும் என்று நினைத்தோம்
வெறும் பக்தியினால் மட்டுமே இயற்றப்பட்டது. ஆனால் பிறகு இது அனைவருக்கும் தெரியவந்தது. ஜோயிஸ
ர்கள் இதனை அச்சிட்டு வெளியிட்டார். தற்போது இதனை உரையுடன் வெளியிடுகிறார். இது ஸ்ரீஹரியின் விருப்பமே
வு அனுமதித்தோம். இதில் காணப்படும் குற்றம் குறைகளை ராஜர் மன்னித்து அருளட்டும். ஜோயிஸ அவர்களுக்கு
றரிவாயு குருகளின் அருள் என்றும் கிடைக்கட்டும் என்று வேண்டுகிறோம்.

- ஸ்ரீசுவித்யேந்திர தீர்த்தர்

வெளியிடுபவரின் முன்னுரை

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருள் மற்றும் ஆசிர்வாதத்தினால் நம் ஹுப்பள்ளி ஸ்ரீ குருராஜ பாதயாத்திரை சங்கம், கடந்த 17 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ வாதிராஜ குருசார்வபௌமர் நிலைபெற்றிருக்கும் ஸ்ரீ சொந்தா க்ஷேத்திரத்திற்கு பாதயாத்திரையை மேற்கொண்டு வருகிறது.

இந்த ஆன்மிக பாதயாத்திரையின் வெற்றிக்கு, ஸ்ரீ வாதிராஜரின் அந்தர்யாமி ஸ்ரீ மத்வாசார்யர், அவரின் அந்தர்யாமி ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ தேவரின் கருணையே நம் யாத்ரிகர்களின் பாதுகாப்பு அரணாக இருந்துவருகிறது. இந்த மகானுபாவரின் அருள் நம் யாத்திரை சங்கத்தின் மேல் எப்போதும் இருப்பதே நம் சங்கத்தின் பலம்.

நம் பாதயாத்திரையின் பத்தாம் ஆண்டு நிறைவாக, உடுப்பி ஸ்ரீ பேஜாவர அதோக்ஷஜ மடத்தின் ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வேஷ தீர்த்த ஸ்ரீபாதங்களவர் மற்றும் இளையவரான ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வபிரசன்ன தீர்த்த ஸ்ரீபாதங்களவர் இருவரும் பங்கேற்று, சிறப்பு அருள் ஆசிர்வாதங்களை வழங்கியதை நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் 12ம் ஆண்டு பாதயாத்திரையில், ஸ்ரீக்ஷேத்திர மந்திராலய ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுஷமீந்திர தீர்த்தரின் ஆசியைப் பெற்ற ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுவித்யேந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர் மற்றும் உடுப்பி ஸ்ரீ பேஜாவர அதோக்ஷஜ மடத்தின் ஸ்ரீஸ்ரீ 1008 விஸ்வேஷதீர்த்த ஸ்ரீபாதங்களவரிடமிருந்து சன்யாச ஆசிரமத்தைப் பெற்ற ஸ்ரீவிஸ்வகுருப்ரிய ஸ்ரீபாதங்களவர் இருவரும் பங்குபெற்றிருந்தனர். இந்த பாதயாத்திரையில் ஸ்ரீ சுவித்யேந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர் ஸ்ரீமத்பாகவத சப்தாஹத்தை அருளினார். அதுமட்டுமல்லாமல் 'ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளின்' அக்ஷர மாலிகா ஸ்தோத்திரத்தை அதன் விளக்கத்துடன் இயற்றி, அருளுரை வழங்கி, நம் இயக்கத்திற்கு சிறப்புப் பரிசினை அளித்தார். இது ஸ்ரீ வாதிராஜ குருசார்வபௌமரின் கருணையே காரணம் எனவேண்டும்.

கலியுகத்தின் காமதேனு, கல்பவிருக்ஷம் 'ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் அக்ஷர ஸ்தோத்திர மாலா'வை இயற்றியிருக்கும் ஸ்ரீமத் அப்பண்ணாசார்யரின் அபராவதாரிகளான ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் அன்பிற்குரிய புத்திரரான ஸ்ரீ கிருஷ்ணாவதூதரை நினைத்தவாறு மற்றும் அதன் விளக்கத்தைக் கொடுத்திருக்கும் பண்டிதர் திரு. நாராயணாசார்ய தொளகேட, ஹுப்பள்ளி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

2013ம் ஆண்டு ஜனவரியில் ஸ்ரீபாதங்களவரின் தலைமையில் நடந்த சிறப்பு பாதயாத்திரையில் ஜகன்மாதா நிலைநின்றிருக்கும் ஸ்ரீக்ஷேத்திரம் கொல்லாபுரம் ஸ்ரீ மகாலட்சுமியின் தரிசனத்திற்கு, தினந்தோறும் ஸ்ரீ லட்சுமி சோபானே சொற்பொழிவுடன் மற்றும் 2014ம் ஆண்டு டிசம்பரில் ஜகத்பதி வீற்றிருக்கும் ஸ்ரீக்ஷேத்திரம் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரனின் தரிசனத்திற்கு ஸ்ரீஸ்ரீனிவாச கல்யாண சொற்பொழிவுடன் பாதயாத்திரை நடத்தினோம்.

இந்த சிறப்பு பாதயாத்திரையின் நினைவிற்காக தினந்தோறும் பாராயணத்திற்கு உதவியாக இருக்கும்படியான 15 ஸ்தோத்திரங்களை தொகுத்து 'ஸ்தோத்திர மாலா' என்னும் சிறு புத்தகத்தை ஸ்ரீபாதங்களவர் வெளியிட்டார். அடுத்து சில முக்கிய கீர்த்தனைகளின் தொகுப்பாக 'ஹரிநாம சங்கீர்த்தன' என்னும் சிறு புத்தகத்தை தேதி 20-8-2015 அன்று, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மத்திய ஆராதனையன்று ஸ்ரீபாதங்களவர் அருளி வெளியிட்டார். இது எங்களுடைய பாக்கியம் என்று அவருக்கு எங்களின் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நம் சங்கத்தின் சார்பில், ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் மத்திய ஆராதனை, புதன்கிழமை தேதி 9-8-2017 அன்று 'அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்', 'ஸ்தோத்திர மாலை'யின் 4வது பதிப்பினை ஸ்ரீபாதங்களவரின் அருளாசியுடன் வெளியிடுகிறோம். இந்த சிறு புத்தகங்களான 'அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்', 'ஸ்தோத்திர மாலை' மற்றும் 'ஹரிநாம சங்கீர்த்தனை', அனைவரின் வேண்டுதல்களையும் நிறைவேற்றவல்லன. ஆகையால், சஜ்ஜன பக்தர்கள் அனைவரும் தினந்தோறும் இவற்றை பாராயணம் செய்து ஸ்ரீ ஹரிவாயு குருகளின் அருளுக்கு பாத்திரராகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முதல் பதிப்பு : 4-5-2012 வெள்ளிக்கிழமை
இரண்டாம் பதிப்பு : 30-12-2012 ஞாயிற்றுக்கிழமை
மூன்றாம் பதிப்பு : 7-4-2016 வெள்ளிக்கிழமை
நான்காம் பதிப்பு : 9-8-2017 புதன்கிழமை
(ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மத்திய ஆராதனை)

ஸ்ரீ எல்.வி. கணேஷ் ஜோயிஸ
நிறுவியவர் மற்றும் நிர்வாகி
ஸ்ரீ குருராஜ பாதயாத்ரா சங்கம்
ஹுப்பள்ளி (கிளை: பெங்களூரு)

வேண்டுகோள்: இந்த புத்தகம் மிகக் கவனமுடன் தொகுக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் இவற்றில் ஏதேனும் பிழைகளை கண்டால், அதை எங்களுக்கு தயவுசெய்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீமத் பாவிசமீர ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளின் அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்

அத்யாத்ம வித்யோபதேஷ்ட்ரே நமோ வாஜி வக்த்ராங்க்ரி பக்தாய துப்யம்குரோ
ஸ்ரீவாதிராஜாய ஸ்ரீவாதிராஜாய ஸ்ரீவாதிராஜாய பாஹிப்ரபோ 01

யுக்திமல்லிகா, சரஸபாரதிவிலாஸ போன்ற கிரந்தங்களினால் அனைவருக்கும் ஆன்மிகத்தை உபதேசித்த, ஹயக்ரீவரின் பக்தரான ஸ்ரீவாதிராஜரே தங்களை வணங்குகிறோம்.

02
ஆபத்வினாஷாய சம்பத்^{3}விதா^{1}ராய சந்தானதா^{3}த்ரே நமஸ்தேகுரோ ||ஸ்ரீவாதி||

ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுபவராகிய, செல்வங்களை கொடுப்பவராகிய, சந்தான பாக்கியத்தை வழங்குபவராகிய தங்களை வணங்குகிறோம்.

03
இஷ்டப்ரதாத்ரே தபோஷ்ட்ரே மஹாகஷ்ட ஜாதஸ்ய ஹர்த்ரே நமஸ்தே குரோ ||ஸ்ரீவாதி||

விரும்பியதைக் கொடுக்கும் தவ சிரேஷ்டரே, கஷ்டங்களை நீக்குபவரே, தங்களை வணங்குகிறோம்.

04
ஈஷஸ்ய தேவஸ்ய திவ்யம்பதம் பா^{4}வி கல்பேகில ப்ராப்யஸஸித்வம் குரோ ||ஸ்ரீவாதி||

அடுத்த கல்பத்தில் வாயுதேவரின் பதவியை வகிக்கப்போகும் தங்களை வணங்குகிறோம்.

05
உர்வீஷமுக்யார ஸப்பாபி^{3} வந்த்யாங்க்ரி பத்மாயபூ^{4}யோ நமஸ்தேகுரோ ||ஸ்ரீவாதி||

மகாராஜனான அரசப்ப நாயக்கனால் வணங்கப்பட்ட பாதங்களைக் கொண்ட வாதிராஜாார்யருக்கு எங்களின் வணக்கங்கள்.

ஊர்ஜாதிஹீனேடனு கம்பாதி ஸாத்குண்யமூர்த்தே நமோனந்த கீர்த்தே ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 06

உணவு, உடை இல்லாதவர்களுக்கு கருணை முதலான குணங்களைக் காட்டும் பற்பல புகழ்களைப் பெற்ற குருவிற்கு எங்களின் வணக்கங்கள்.

ரிக்வேத மந்த்ரேஷு விக்[2]யாத மஹாத்ம்ய பௌராணவித்யா சுவேத்ய ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 07

ரிக்வேத, புராணங்களில் சிறந்தவரான வாதிராஜருக்கு எங்களின் வணக்கங்கள்.

ரூக[4]ம்ஹரிம் ப்ரார்த்தயன்னஸ்த காமாதி ஷட்வர்க்க மூர்த்தே நமஸ்தே குரோ ||ஸ்ரீவாதி|| 08

'ரூக' நாமக ஹரியை வணங்கி, காம கிரோத முதலான ஷட்-வர்க்கங்களை முற்றிலும் விலக்கிய குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

லித்யேப பூர்ணத்வதோ வாச்ய வாஜ்யாஸ்ஸ்ய பாதா[3]ப்ஜப்ருங்க ப்ரபோ மே குரோ ||ஸ்ரீவாதி|| 09

அனைத்திலும் முழுமையானவராகையால், 'ல்ரு' என்னும் எழுத்து போற்றும் ஹயக்ரீவனின் பாதங்களில் பக்தராக இருக்கும் குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

ல்ரூகாரவாச்யை: சுபக்த்யைர் ஜிதத்வாத்தி லஜோர்வராஹஸ்ய பக்த ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 10

பக்தர்களின் வசனான, 'ல்ரூஜி' நாமக வராக தேவரின் பக்தரான வாதிராஜருக்கு எங்களின் வணக்கங்கள்.

ஏடே[3]தி மூகேதி விக்[2]யாத விப்ரேண விருந்தாவனாக்யான காரின் குரோ ||ஸ்ரீவாதி|| 11

காது கேட்காத, பேச முடியாத ஒருவர் மூலமாக 'ஸ்வப்ன விருந்தாவனாக்யான' கிரந்தத்தை எழுத வைத்த குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஐகாத்ம்யவாதம் நிராக்ருத்ய ஜீவேஷ பேதஸ்யவாதின் நமஸ்தே குரோ ||ஸ்ரீவாதி|| 12

ஜீவ-பிரம்மன் இரண்டும் ஒன்றே என்னும் வாதத்தை நிராகரித்து, அவர்களுக்கிடையே இருக்கும் பேதத்தை விளக்கிய குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஓம்கார மந்த்ரஸ்ய ஜாபேதினிஷ்டாய குஷ்டாதிஹந்த்ரே நமஸ்தே குரோ ||ஸ்ரீவாதி|| 13

ஓம்கார மந்திரத்தை ஜபிப்பதில் சிறந்தவரான, குஷ்டாதி ரோகங்களை போக்குவதில் வல்லவரான, குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஔதார்ய சௌந்தர்ய காம்பீர்ய வீர்யாதி திவ்யைர் குணைர்பா[4]ஸிதாத்ம ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 14

கருணை, அழகு, காம்பீர்யம் ஆகிய நற்குணங்களால் ஜொலிக்கும் தேகத்தைக் கொண்ட ராஜருக்கு எங்களின் வணக்கங்கள்.

அம்போ[4]திஜா ஷோபனாக்யம் ப்ரபந்தம் வினிர்மாய பக்தாப ம்ருத்யார்த்திஹன் ||ஸ்ரீவாதி|| 15

லக்ஷ்மி சோபானே என்னும் பிரபந்தத்தை இயற்றி, பக்தர்களுக்கு வரும் துர்மரணங்களைப் போக்கும் குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

அர்த்தார்தி[1]னாம் காமதுக்த்வா மனோபீஷ்ட மாபூரயன் சர்வ மான்யோஸிபோ ||ஸ்ரீவாதி|| 16

பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி, எல்லோராலும் போற்றப்படும் ராஜருக்கு எங்களின் வணக்கங்கள்.

காருண்ய பூர்ணாய வைராக்ய பாக்யாய துப்யம் நமஸ்ஸந்ததம் மே குரோ ||ஸ்ரீவாதி|| 17

வைராக்யமே சிறந்தது என்று விளக்கிய, கருணாமயியான குருகளுக்கு எங்களின் நிரந்தரமான வணக்கங்கள்.

க[2]ர்வேதரானந்த தீர்த்த ப்ரதிஷ்டாபனா க்ருத்கு[3]ரோ ரௌப்யபீடேபுரே ||ஸ்ரீவாதி||

உடுப்பியில் ஸ்ரீமதாசார்யரை பிரதிஷ்டை செய்த குருகளுக்கு எங்களின் வணக்கங்கள். 18

கு[3]ண்டக்ரியாரூப பத்யப்ரபந்தேன மாயாமத த்வம்ஸகாரின் குரோ ||ஸ்ரீவாதி||

'குண்டக்ரியா' என்னும் பிரபந்தத்தின் மூலமாக மாயா மதங்களை த்வம்ஸம் செய்த குருகளே எங்களைக் 19
ாப்பாற்றுங்கள்.

கோ[4]டஸ்யதாட்[1]யா த்விபஞ்சாத்ம ரூபஸ்ய விஷ்ணோஸ்துதிம் சாக்ருதா[2]ஸ்த்வம் விபோ ||ஸ்ரீவாதி||

அஷ்வதாடி நுடியில், விஷ்ணுவின் தசாவதார ஸ்துதியை இயற்றியவரே, எங்களைக் காப்பாற்றுங்கள். 20

ஞாத்யேன ஸாராந்த்[1]ய ஷப்தேன வாச்யோ ஹயாஸ்ஸ்ய: ஷிரோகா[3]த்ய கா[2]தீஹிதே ||ஸ்ரீவாதி||

தங்களில் தலை மேல் இருக்கும் ஹயக்ரீவரை வணங்குவதால், ஹயக்ரீவதேவரை 'ஞாஸார' என்னும் சொல்லினால் 21
கழும் குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

சத்வாரி க்ருஷ்ணஸ்ய பர்யாய பூஜாசுபா[4]க்யானி லப்த்வா க்ருதார்த்த ப்ரபோ ||ஸ்ரீவாதி||

உடுப்பி கிருஷ்ணனின் பர்யாய பூஜை செய்யும் பாக்கியத்தை, நான்கு முறை பெற்று தன்யரான குருகளுக்கு எங்களின் 22
ணக்கங்கள்.

சந்தஸ்ஸூ தத்வப்ரகாஷாய சத்க்ரந்தமேகம் பகர்த்தா[1]த் புத[1]ந்த்வம் குரோ ||ஸ்ரீவாதி||

'ஸ்ருதிதத்வ பிரகாசிகா' என்னும் நற்கிரந்தத்தை இயற்றிய ராஜரே, எங்களைக் காப்பாற்றுங்கள். 23

ஜன்மாபி தேSத்யத்புதம் புஷ்பகாஸார மத்யஸ்த கார்தஸ்வரே பா[4]ஜனே ||ஸ்ரீவாதி|| 24

ஹூவின கெரெ கிராமத்தில், பூமியின் ஸ்பரிசம் ஆகாமல், தங்கத் தட்டில் பிறந்த உங்களது பிறப்பே அற்புதம் குருகளே.

ஜாட்க்ருத்யச ப்ரம்மரக்ஷஸ்த தீ[3]யாகி[2]லப்ரஷ்ன த[3]த்தோத்தரஸ்த்வம் விபோ ||ஸ்ரீவாதி|| 25

பிரம்மராக்ஷசன் ஒருவனை நியமித்து, அவன் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் பதிலளித்த குருகளே உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஞாமம்ஹரிம் சாமவேதேன சம்யக் ஸுமேயத்[1]வதோ[1] வேதயன்மே குரோ ||ஸ்ரீவாதி|| 26

சாதவேதத்தினால் போற்றப்படுபவன் ஆகையால், 'ஞாம' என்று அழைக்கப்படும் வராகனை எங்களுக்கு போதித்த குருகளே, உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

டீகாக்ருத: ஸ்ரீகர ஸ்ரீசுதாகிரந்த பாடேன சம்ப்ராப்த சம்பத்குரோ ||ஸ்ரீவாதி|| 27

டீகாக்ருத்பாதரின் சுதா கிரந்தத்தை பாடம் சொல்லியவாறு, பற்பல செல்வங்களைப் பெற்ற குருகளே எங்களைக் காப்பாற்றுங்கள்.

டா[2]னாமபிக்ஞான பக்த்யாதிபிஸ்த்வம் சதாபீஷ்ட தா[3]தா[1]ஸி சத்யம் விபோ ||ஸ்ரீவாதி|| 28

ஞான பக்திகளினால், அனைவரிடமும் கருணையைக் காட்டி, அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றும் குருகளே உங்களுக்கு வணக்கங்கள்.

டோலோத்ஸவே கானஹேதோர் முகுந்தஸ்ய க்ருஷ்ணாஷ்டக ஸ்தோத்ர கர்தர்குரோ ||ஸ்ரீவாதி|| 29

கிருஷ்ணனின் தொட்டில் சேவையில் பாடுவதற்காக, கிருஷ்ணாஷ்டக ஸ்தோத்திரத்தை இயற்றிய குருகளே எங்களைக் காப்பாற்றுங்கள்.

ட[4]ங்கார பூர்வம் ஸ்புடத்தீப சூர்ணோத்ஸவே தோஷிதானந்த மூர்த்தே குரோ ||ஸ்ரீவாதி|| 30

பெரும் சப்தத்துடன், தீப சூர்ணோத்ஸவம் செய்து, த்ரிவிக்ரம தேவரை ஆனந்தப்படுத்தும் குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

ணே[5]த்யஸ்ய வர்ணஸ்ய வாச்யார்த்தமானந்த மாதேஹிக்ருஷ்ணயைக சத்பக்தபோ ||ஸ்ரீவாதி|| 31

'ணகார'த்தினால் புகழப்படும் ஆனந்தத்தை எங்களுக்குக் கொடுங்கள், கிருஷ்ண பக்தரான குருகளே.

தீர்த்தான்யடன்புண்ய பூ[4]பா[4]ரதஸ்தானி தீர்த்தப்ரபந்தாப்த[1] கீர்த்தே குரோ ||ஸ்ரீவாதி|| 32

புண்ணியபூமியான பாரத தேசத்தின் தீர்த்தஸ்தலங்களை தரிசித்து, 'தீர்த்தபிரபந்தம்' இயற்றி, பெரும்புகழ் ஈட்டிய ருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

தூ[4]த்கார பாத்ரத்வ மாப்த்யைஸ்சதா சர்வ துஷ்ட்யைஸ்ச தூ[4]ர்ணோ பி[4]யாசே[1] குரோ ||ஸ்ரீவாதி|| 33

துஷ்டர்களால் துன்புறுத்தப்படும் எங்களை காப்பாற்ற வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

தண்டேன பா[4]ஸ்வத் சுதோர்தண்ட காஷாய திவ்யாம்பராங்க ப்ரபோ மே குரோ ||ஸ்ரீவாதி|| 34

தண்டம் சார்த்திய தோள்களுடன், காஷாயத்தை அணிந்தவரே, எங்களைக் காப்பாற்றுங்கள்.

தர்மார்த்த காமா அபவர்கா[3]க்[2]ய பா[4]க்யானி பக்தேஷ்டஜஸ்ரம் ததாஸி ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 35

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த்தங்களை, எப்போதும் பக்தர்களுக்கு அருள்பவரே உங்களுக்கு ங்களின் வணக்கங்கள்.

நானாஜனானாம்க்ருதே நிர்மித ப்ராக்ருத ஸ்தோத்ர காதா[2]க்ருதே ஹே குரோ ||ஸ்ரீவாதி|| 36

அனைத்து மக்களும் பகவந்தனை நினைக்க வேண்டுமென்று, பேசுமொழியில் ஸ்தோத்திரங்களை இயற்றி உதவிய ருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

பூர்ணப்ரபோதீய சாஸ்த்ரார்ண வாத்ஸஞ்சிதா மூல்யயுக்தி ப்ரஸூன ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 37

பூர்ணபோதரின் சாஸ்திரம் என்னும் கடலில், விலைமதிக்க முடியாத ரத்தினத்தைப் போல இருக்கும் 'யுக்திமல்லிகா' கிரந்தத்தை இயற்றிய குருகளுக்கு எங்களின் வணக்கங்கள்.

பாலாக்ஷ சாஹஸ்ர நேத்ராதி தேவாலி சம்சேவ்ய பாதாப்ஜ யுக்ம ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 38

ருத்ரர் முதலான தேவர்களால் வணங்கப்படும் பாத-கமலங்களைக் கொண்ட வாதிராஜரே உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

ப[3]த்தா[2]னுகம்போ[1]ஸி ப[3]த்தே[3]ஷு மந்தே[3]ஷு வ்ருத்தேஷு தீனேஷு தூனேஷு போ ||ஸ்ரீவாதி|| 39

சிறுவர்களுக்கு, வயதானவர்களுக்கு, குறைந்த புத்தியுள்ளவர்களுக்கு, மற்றவர்களை அண்டியிருப்பவர்களுக்கு பெரும் கருணை காட்டும் குருகளே, உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

பௌ[4]கோலிகம் கிரந்தரத்னம் வினிர்மாய சோபாக்ருதா: பண்டிதாம்ஸ்த்வம் குரோ ||ஸ்ரீவாதி|| 40

'பூகோள வர்ணனை' என்னும் கிரந்த ரத்னத்தை இயற்றி, பண்டிதர்களுக்கு ஆறுதல் அளித்தவரே, எங்களைக் காப்பாற்றுங்கள்.

மூகாம்பிகானு க்ரஹேணாஸ்த துர்வாத்ய மித்ராகி[2]லார்ய ப்ரபூஜ்ய ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 41

மூகாம்பிகையின் அருளால் அனைத்து பிரச்னைகளையும் தீர்த்த குருகளே எங்களைக் காப்பாற்றுங்கள்.

யக்ஞாதி சத்கர்மயோகேன வித்யாக்[2]ய யோகேனசா[1]ஹம் விஹீனோ விபோ ||ஸ்ரீவாதி|| 42

யக்ஞம் முதலான கர்மயோகம் இல்லாத, கல்வி முதலான ஞானயோகம் இல்லாத, எங்களைக் காப்பாற்றுங்கள் குருவே.

ரூப்யேபுரே சன்மடானஷ்ட நிர்மாப்ய சா2த்ராதி ஸாஹாய்ய கர்தர்குரோ ||ஸ்ரீவாதி|| 43

உடுப்பியில் விஸ்தாரமான எட்டு மடங்களை நிறுவி, மாணவர்களுக்கு உதவிய குருகளே, உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

லக்ஷ்மீபதேஸ் ஸத்குணௌகஸ்ய ஸந்தர்ஷ கந்த3ர்ப்பணம் தத்த வாம்ஸ்த்வம் குரோ ||ஸ்ரீவாதி|| 44

'ஸ்ரீஷகுண தர்பண' என்னும் பகவந்தனின் குணங்களை தெரிவிக்கும் கிரந்தத்தைக் கொடுத்தவரே, உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

வாகீஷ தீர்த்தாப்த1 துர்யாஸ்ரமாசேஷ சத்தர்ம கர்ம்மைக நிஷ்ட ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 45

வாகீஷ தீர்த்தரிடமிருந்து சன்யாச ஆசிரமத்தைப் பெற்ற, எப்போதும் தர்மத்தை பின்பற்றும் வாதிராஜரே, எங்களைக் காப்பாற்றுங்கள்.

ஷங்காகலங்கேன ஸர்வத்ர விஷ்வாஸ ஹீனஸ்ஸதா ப்4ரஷ்ட ஏவாஸ்மிபோ ||ஸ்ரீவாதி|| 46

சந்தேகம் என்னும் களங்கத்தினால் எல்லா இடங்களிலும் நம்பிக்கையை இழந்த எங்களை, காப்பாற்றுங்கள் குருவே

ஷட்வர்க்க நாஷாய பஞ்சீக்ருதி ப்ரக்ரியா போ3ததாயின் நமஸ்தே குரோ ||ஸ்ரீவாதி|| 47

காமாதி ஷட்வர்க்கங்களை அழிப்பதற்கு 'பஞ்சீகரண ப்ரக்ரியா' என்னும் கிரந்தத்தை இயற்றி ஞானத்தைக் கொடுக்கும் குருவே, உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஸோதாபுரே ஷுத்தகங்காதடே பஞ்ச விருந்தாவனாவாஸ தீனோஸ்மிபோ ||ஸ்ரீவாதி|| 48

தவளகங்கா கரையில், சோதே க்ஷேத்திரத்தில் ஐந்து பிருந்தாவனங்களில் வசித்து வரும் குருகளே எங்களைக் காப்பாற்றுங்கள்.

ஹம்ஸஸ்ய வம்ஷாவதம் ஸாத்ய தாஸோஸ்மி ஹம்ஸாதி ரூட ப்ரபோ தே குரோ ||ஸ்ரீவாதி|| 49

சன்யாசிகளின் வம்சத்திற்கே ஒரு ஆபரணமாக இருக்கும் ஹம்ஸ பரம்பரையில் ஒரு முகுடமாக இருப்பரே, உங்களின் தாசராக இருப்போம், எங்களைக் காப்பாற்றுங்கள்.

ளாளுகபூ4ஷ: க்ருதோக3ண்ட3 கீக்ரா3வபி4: ஷைலக3: ஸ்ரீனிவாஸ: ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 50

திருப்பதி ஸ்ரீனிவாசனுக்கு சாலிக்கிராம மாலையை சமர்ப்பித்த குருகளே எங்களைக் காப்பாற்றுங்கள்.

க்ஷோணீ சுராக்ர்யஸ்ய ராமாபி4தே4யஸ்ய ஸத்தர்ம ப1த்ன்யாம் சுஜாத ப்ரபோ ||ஸ்ரீவாதி|| 51

சுரர்களில் முதல்வரான ராமாசார்யரின் மனைவியிடம் பிறந்த குருகளே உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஸ்ரீசுவித்யேந்த்ர தீர்த்தை: க்ருதாவர்ண மாலாஸ்துதி: ஸ்ரீஷ துஷ்ட்யை ப்ரபோ மே குரோ ||ஸ்ரீவாதி|| 52

ஸ்ரீசுவித்யேந்திர தீர்த்தரால் இயற்றப்பட்ட இந்த வர்ணமாலா ஸ்துதி, வாதிராஜரின் அந்தர்யாமியான ஸ்ரீஷனின் ஆனந்தத்திற்காக இயற்றப்பட்டது.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸோதாபுரீ நிவாஸ பஞ்ச பிருந்தாவனவாஸ ராஜாதிராஜ வாதிராஜ குருசார்வபௌம கோவிந்தா கோவிந்தா !!

கலியுக காமதேனு கல்பதரு ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்
அக்ஷர மாலிகா ஸ்தோத்திரம் - உரையுடன்



பதினோறாவது படலம் :

அஞ்ஞானநாஷாய விக்ஞான பூர்ணாய சுக்ஞானதா[3]த்ரே நமஸ்தே குரோ
ஸ்ரீராகவேந்திராய ஸ்ரீராகவேந்திராய ஸ்ரீராகவேந்திராய பாஹிப்ரபோ ||ஸ்ரீராக|| 1

அஞ்ஞானத்தைப் போக்கும் சிறப்பு ஞானத்தைக் கொண்டிருக்கும் மற்றும் நல்ல ஞானத்தைக் கொடுக்க வல்ல உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஆனந்த ரூபாய நந்தாத்மஜ ஸ்ரீபதாம்போஜபா[3]ஜே நமஸ்தே குரோ ||ஸ்ரீராக|| 2

ஆனந்த ரூபத்தைக் கொண்ட, நந்தனின் மகனான ஸ்ரீகிருஷ்ணனின் பாத-கமலங்களை பிடித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

இஷ்டப்ரதானேன கஷ்டப்ரஹானேன ஷிஷ்டஸ்துத ஸ்ரீபாதாம்போஜபோ[3] ||ஸ்ரீராக|| 3

பக்தர்களின் பிரார்த்தனைகளுக்கேற்ப அவர்களுக்கு இஷ்டார்த்தங்களைக் கொடுப்பவராகவும், அவர்களின் கஷ்டங்களைப் போக்குபவராகவும், அவர்களால் பூஜிக்கப்படும் பாதபத்மங்களைக் கொண்டவராகவும் இருக்கிறீர்கள்.

ஈடே[4] பவத்வாத பாதோ[2]ஜமாத்யாய பூ[4]யோபி பூ[4]யோ பா[4]யாத்பாஹிபோ ||ஸ்ரீராக|| 4

தங்களின் பாத-கமலங்களை தியானம் செய்தவாறு, திரும்பத்திரும்ப தங்களை பூஜிக்கின்றேன். என் பயங்களை அகற்றி, எனக்கு அருளவும்.

உக்ரம்பிஷாசாதி க[1]ந்த்ராவயித்[1]வாக்ஷு சௌக்யம்ஜனானாம் கரோஷிஷபோ ||ஸ்ரீராக|| 5

உக்ர ரூபங்களைக் கொண்ட பிசாசுகளை தூர ஓட்டி, நீங்கள் மக்களுக்கு நற்பலன்களைக் கொடுக்கிறீர்கள்.

ஊர்ஜத்க்ருபாபூர பாதோனிதேமக்ஷு துஷ்டோனு க்ருண்ஹாஸி பக்தான்விபோ ||ஸ்ரீராக|| 6

பொங்கி வழியும் கருணை என்னும் வெள்ளத்தினால், கடல் போன்று காட்சி தரும் குருகளே, மகிழ்ச்சியுடன் நீங்கள் பக்தர்களுக்கு அருள்கிறீர்கள்.

ருஜூத்தமப்ராண பாதார்ச்சன ப்ராப்த மஹாத்ம்ய சம்பூர்ண ஸித்தேஷபோ ||ஸ்ரீராக|| 7

ப்ரபுகளே! நீங்கள் ருஜுகணர்களில் சிறந்தவரான பிராணதேவரின் பாதங்களை பூஜித்து, அதிலிருந்து மஹாத்ம்யத்தை அடைந்து, சித்தபுருஷராகி இருக்கிறீர்கள்.

ருபுஸ்தபாவாப்த பக்தேஷ்ட கல்பத்ரு ரூபேஷ பூ[4]பாதி வந்த்ய ப்ரபோ ||ஸ்ரீராக|| 8

நீங்கள் தேவதா-ஸ்வரூபம் உள்ளவர். பக்தர்களின் இஷ்டங்களை நிறைவேற்றும் கல்பவிருக்ஷ ஸ்வரூபர், அனைவராலும் வணங்கப்படுபவர்.

ரூத்த[3]ம்யஷஸ்தே விபா[3]தி ப்ரக்ருஷ்டம் ப்ரபன்னார்த்தி ஹந்தர் மஹோதாரபோ ||ஸ்ரீராக|| 9

சரணடைந்தவர்களின் துக்கங்களை தீர்க்கும், கருணை உள்ளம் கொண்ட குருகளாக இருக்கிறீர்கள்.

க்ரிப்தாதி பக்தௌக[4] காம்யர்த்த தா[3]தர்ப[3] வாம்போ[4]தி பாரங்கத ப்ராக்ஞபோ ||ஸ்ரீராக|| 10

பற்பல பக்தர்களைக் கொண்டவரே, காமிதார்த்தங்களைக் கொடுப்பவரே, சம்சார சாகரத்தைக் கடந்திருக்கும் அறிஞரே, தங்களின் புகழ் வளர்ந்து அதிக வெளிச்சமாக இருக்கிறது.

ஏகாந்தபக்த்யாய மாகாந்த பாதாப்ஜ உச்சாய லோகே ஸமஸ்தே விபோ ||ஸ்ரீராக|| 11

லக்ஷ்மிபதியான ஸ்ரீஹரியின் பாதங்களில் ஏகாந்த பக்தராகி, உலகத்தில் உச்ச பதவியினை அடைந்திருக்கும் தங்களுக்கு எங்களின் வணக்கங்கள்.

ஐஸ்வர்ய பூ⁴மன் மஹாபாக்யதாயின் பரேஷாஞ்ச க்ருத்யாதி நாஷின் ப்ரபோ ||ஸ்ரீராக|| 12

பிரபுகளே, ஐஸ்வர்யங்களைக் கொண்டிருப்பவரே, மகாபாக்கியங்களைக் கொடுப்பவரே, இதரர்களின் தொந்தரவுகளை போக்கும் குருகளே, தங்களுக்கு வணக்கங்கள்.

ஓம்கார வாச்யார்த்த பா⁴வேன பா⁴வேன லப்⁴தோதய ஸ்ரீகயோகீஷபோ ||ஸ்ரீராக|| 13

ஓம்காரத்தால் புகழப்படுபவனான பரமாத்மனின் தியானத்தினால், தாங்கள் உத்தம ஸ்தானத்தைப் அடைந்து யோகீசராக இருக்கிறீர்கள்.

ஔர்வானலப்ரக்ய துர்வாதி தாவானலை: சர்வதந்த்ர ஸ்வதந்த்ரேஷபோ ||ஸ்ரீராக|| 14

கடலின் ஆழத்திற்கு சமமான துஷ்டர்களை எதிர்ப்பதில் தாங்கள் காட்டுத்தீயைப் போன்றவர். பிரபுகளான தாங்கள் சர்வதந்திரங்களிலும் ஸ்வதந்த்ரரே.

அம்போ⁴ஜ ஸம்பூத முக்யாமராராத்ய பூ⁴னாத பக்தேஷ பா⁴வாக்ஞுபோ ||ஸ்ரீராக|| 15

கமலத்தில் பிறந்தவரான பிரம்மன் முதலான தேவர்களினாலும் வணங்கப்படுபவரே, பக்தர்களுக்கெல்லாம் தலைவரே.

அஸ்தங்கதானேக மாயாதிவாதீஷ வித்யோதிதாதேஷ வேதாந்தபோ ||ஸ்ரீராக|| 16

அனைத்தையும் அறிந்தவரே, பற்பல மாயாவாதிகளுக்கு தலைவரானரே (அவர்களை வென்றவரே), அனைத்து வேதாந்தங்களுக்கும் ஒளி பாய்ச்சியவரே.

காம்யார்த்ததானாய பத்தாதராஸேஷ லோகாய ஸேவானு ஸக்தாயபோ ||ஸ்ரீராக|| 17

சேவை செய்யும் பக்தர்களுக்கு, இஷ்டார்த்தங்களைக் கொடுக்கும் குருகளுக்கு வணக்கங்கள்.

க²த்யோதஸாரேஷு ப்ரத்யர்த்தி ஸார்த்தேஷு மாத்யன்ஹ மார்த்தாண்ட பிம்பாப⁴போ ||ஸ்ரீராக|| 18

மின்னல், இடிகளைப் போல இருக்கும் எதிராளியின் வாதங்களை வீழ்த்தி, மதிய சூரியனைப் போல ஒளிர்பவரே, தங்களுக்கு வணக்கங்கள்.

கர்விஷ்ட கர்வாம்பு³ ஷோஷார்ய மாத்யுக்ர நம்ராம்புதேர்யா மினீனாதபோ ||ஸ்ரீராக|| 19

கர்விஷ்டர்களின் கர்வம் என்னும் நீரினை கரைப்பதில், தாங்கள் சூரியனைப் போல இருக்கிறீர்கள். மிகுந்த மரியாதையுடன், கடலைப் போல அமைதியாக இருப்பவர்களுக்கு தாங்கள் (மகிழ்ச்சியைக் கொடுக்கும்) சந்திரனைப் போல இருக்கிறீர்கள்.

கோராமயத்வாந்த வித்வம்ஸ நோத்தாம தே³தீப்ய மானார்க்க பிம்பா⁴பபோ ||ஸ்ரீராக|| 20

கெட்ட விஷயங்கள் என்னும் இருட்டினைப் போக்குவதில், மிகவும் ஒளிமயமான சூரியனைப் போல தாங்கள் ஒளிர்கிறீர்கள்.

ஞணத்கார தண்டாங்க காஷாய வஸ்த்ராங்க கௌபீனபீனாங்க ஹம்ஸாங்கபோ ||ஸ்ரீராக|| 21

'ஞண' என்று சப்தம் போடும் தண்டத்தையும், காஷாய வஸ்திரங்களையும், கௌபீனத்தையும், பரமஹம்ஸர்களின் சின்னங்களையும் தரித்திருக்கும் குருகளே.

சண்டீஷ காண்டேஷ பாகண்ட வாக்காண்ட தாமிஸ்ர மார்த்தாண்ட பா பாண்டபோ ||ஸ்ரீராக|| 22

தர்மத்தை பாதுகாப்பவர்களுக்கு நீங்கள் தலைவர்; தர்மத்தை விட்டவர்களின் பேச்சுகள் என்னும் இருட்டைப் போக்கிய சூரியனைப் போன்றவரே

ச[2]த்மாணுபாகம் நவித்[3]மஸ்த்வ தந்த: ஸுஸத்ம்யை வ பத்மாவதம்யாஸிபோ ||ஸ்ரீராக|| 23

தங்களிடம் மறைப்பதற்கு எங்களிடம் எதுவும் இல்லை. தாமரையைப் போல இருக்கும் இதய-கமலத்தில் அனைத்தும் நல்லவையே இருக்கின்றது.

ஜாட்யம்ஹினஸ்தி ஜ்வரார்ஷ: க்ஷயத்யாஷு தேபாத[3] பத்மாம்பு லேஷோபிபோ ||ஸ்ரீராக|| 24

தங்களின் பாத-கமலங்களைக் கழுவிய தீர்த்தத்தின் சிறிதளவுகூட ஜுரம், இருமல், தொழுநோய் ஆகிய நோய்களை விரைந்து போக்கும் சக்தியுடையவை.

ஜா[4]ஷத்வஜேயேஷ வலப்யோருஜேத: ஸமாரூட மாரூட வக்ஷோங்கபோ ||ஸ்ரீராக|| 25

மன்மதனுக்கு வசமாகாத இதயத்தைக் கொண்டிருக்கிறீர்கள். லக்ஷ்மிதேவியை தன் இதயத்தில் கொண்டிருக்கும் பரமாத்மனையே தரித்திருக்கும் தங்களுக்கு வேண்டுவதற்கு ஒன்றும் இல்லை.

ஞா[5]ஞ்சாவிஹீனாய யாத்ருச்சிகப்ராப்த து[1]ஷ்டாய ஸத்[3]ய: ப்ரஸன்னோஸிபோ ||ஸ்ரீராக|| 26

தானாகி வந்து கடமையை செய்பவர்களால் நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்கள்.

டீகா ரஹஸ்யார்த்த விக்[2]யாபனகிரந்த விஸ்தார லோகோபகர்த்த: ப்ரபோ ||ஸ்ரீராக|| 27

ஸ்ரீமத் ஜயதீர்த்த குருவர்யரின் டீகையின் (நியாயசுதா) உள் அர்த்தங்களை விளக்கும் தங்களது விரிவான கிரந்தங்களினால், இந்த உலகத்திற்கு மிகப்பெரிய உதவியை செய்திருக்கிறீர்கள்.

ட[2]ங்குர்வரீணாம மேயப்ப பா[4]வோத்த[3]ராபாத ஸம்ஸார தோமாம் ப்ரபோ ||ஸ்ரீராக|| 28

பிரபுவே! எதிரிகளை விரட்டி ஓடச் செய்யும் தாங்கள், என்றும் அழியாத புகழைப் பெற்றிருக்கிறீர்கள். என்னை இந்த சம்சார சாகரத்திலிருந்து காப்பாற்றுங்கள்.

டா[3]கின்ய பஸ்மார கோராதி கோ[1]க்ர க்ரஹோச்சாடநோதக்ர வீராக்ர்யபோ ||ஸ்ரீராக|| 29

பிசாசுகள், தீங்கினைத் தரும் கிரகங்கள் இவற்றை நிர்மூலமாக்கும் சிறந்த வீரர்களில் தாங்கள் தலைசிறந்தவர்.

ட[4]க்காதிக[1]த்வான வித்ராவிதா[1]னேக துர்வாதி கோமாயு ஸங்கா[4]தபோ ||ஸ்ரீராக|| 30

டக்க என்னும் வாத்தியத்தின் சத்தத்தினால் விரட்டப்பட்ட அனேக துர்வாதிகள் என்னும் நரம்புகளைக் கொண்டவர் நீங்கள்.

ணாத்மாதி மாத்ரர்ண லக்ஷ்யார்த்தக ஸ்ரீபதித்யான சன்னத்ததீஸித்தபோ ||ஸ்ரீராக|| 31

ணாத்ம முதலான பல எழுத்துக்களுக்கு பொருளானவர் நீங்கள். லக்ஷ்மிபதியின் தியானத்தில் ஈடுபட்டு, சித்தி பெற்றவர் நீங்கள்.

தாபத்ரய ப்ரௌடபா[3]தா[3]பி போ[4]த[1]ஸ்ய பக்தஸ்ய தாபத்ரயம் ஹம்ஸிபோ ||ஸ்ரீராக|| 32

பற்பல கஷ்டங்களில் மூழ்கியிருக்கும் பக்தர்களின் கஷ்டங்களை நீங்கள் தீர்க்கிறீர்கள்.

ஸ்தானத்ரய ப்ராபகஞ்ஞான தாதஸ்த்ரீ தாமாங்க்ரி பக்திம் ப்ரயச்ச ப்ரபோ ||ஸ்ரீராக|| 33

ஸ்வர்க்கம் முதலான இடங்களை அடையத் தேவையான ஞானத்தை எமக்குக் கொடுக்கும் பிரபுவே!

தாரித்ர்ய தாரித்ரய யோகேன யோகேன சம்பன்ன சம்பத்தி மாதேஹிடோ ||ஸ்ரீராக|| 34

ஏழ்மையைப் போக்கவல்ல தங்களின் யோகத்தினால், எனக்கு செல்வங்களை கொடுக்கச் செய்யுங்கள்.

தா[4]வந்திதே[1]னாம தேயாபி[4] சங்கீர்த்தனேன்யைன ஸாமாஷு வ்ருந்தானிபோ ||ஸ்ரீராக|| 35

தங்களில் பெயரை சொல்லிக் கொண்டிருப்பதாலேயே, பாவங்கள் வேகமாக ஓடிப் போகின்றன.

நானாவிதானேக ஜன்மாதி துக்கௌக[4]த: ஸாத்வஸம் சம்ஹரோதாரபோ ||ஸ்ரீராக|| 36

பற்பல பிறவிகளிலிருந்து கிடைத்த பாவ/துக்கங்களை, கருணை உள்ளம் கொண்ட நீங்கள் அழித்துவிடுங்கள்.

பாதா[1]த்வமேவேதி[1] மாதாத்வமேவேதி[1] மித்ரந்த்வ மேவேத்[1]யஹம் வேத்[3]மிபோ ||ஸ்ரீராக|| 37

என் தந்தை, தாய், நண்பர் என அனைத்தும் தாங்களே என்று நான் அறிந்திருக்கிறேன் ஸ்வாமி.

பா[2]லஸ்த துர்தெய்வ வர்ணாவளீ கார்ய லோபே[1]பி[1] பக்தஸ்ய ஷக்தோஸிபோ ||ஸ்ரீராக|| 38

பக்தர்களின் நெற்றியில், துர்தேவதைகள் எழுதிய கெட்ட எழுத்துக்களை அழிப்பதில், நீங்கள் வல்லவராக இருக்கிறீர்கள்.

ப[3]த்தோஸ்மி ஸம்ஸார பாஷேன தேங்க்ரிம் வினான்யா க[3]திர்னேத்[1]யமேமி ப்ரபோ ||ஸ்ரீராக|| 39

சம்சாரம் என்னும் கயிற்றில் நான் அகப்பட்டிருக்கிறேன். தங்கள் பாதங்களைத் தவிர எனக்கு வேறு கதியில்லை ன்பதை அறிந்திருக்கிறேன்.

பா[4]வேப[4]ஜாமீஹ வாசாவதாமித்வ தீயம்பதம் தண்டவஸ்னாமிபோ ||ஸ்ரீராக|| 40

தங்கள் பாதங்களை பக்தியுடன் பஜிக்கிறேன். பேச்சில் தங்களைப் புகழ்கிறேன். தண்டத்தைப் போல கீழே விழுந்து ங்களை வணங்குகிறேன்.

மான்யேஷு மான்யோஸி மத்யாச த்ருத்யாச மாமத்[3]ய மான்யம் கு[1]ருத்[3]ராக்விபோ ||ஸ்ரீராக|| 41

வணங்கத்தவர்களில் தாங்கள் முதல்வர். அறிவு, தைரியங்களைப் பெற்று என்னையும் ஒரு நல்ல நிலைக்கு சீக்கிரம் கொண்டு வாருங்கள்.

யங்காம மாகாமயே தன்ன ஜாபந்த[1] த[1]ஸ்த்வம் ஷரண்யோ பவேத்யேமிபோ ||ஸ்ரீராக|| 42

என் ஆசைகளிலிருந்து என்னை விடுவியுங்கள். உங்களின் சரணங்களை நான் அடைவேன்.

ராஜாதி வஷ்யாதி குக்ஷிம் ப[3]ரானேக சாதுர்யவித்யா ஸுமுடோஸ்மி போ ||ஸ்ரீராக|| 43

அரசர்கள் முதலான செல்வந்தர்களை வசப்படுத்தி வயிறு நிரப்பும் மக்களின் அறிவினை (நட்பினை), வேண்டாம் என்று நான் விட்டிருக்கிறேன்.

லக்ஷேஷுதே பக்தவர்கேஷு குர்வேகலக்ஷ்யம் க்ருபாபாங்க லேஷஷ்யமாம் ||ஸ்ரீராக|| 44

தங்களின் லட்சக்கணக்கான பக்தர்களில் ஒருவனாக இருக்கும் எனக்கு எவ்வித துக்கங்களும் வராதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

வாராங்கநாத்யூத சௌ[1]ர்யான்யடாராத ரத்வாத்ய வத்யத்வதோமாம் ப்ரபோ ||ஸ்ரீராக|| 45

சூனியம், சூது, திருட்டு, பிறன்மனை நோக்குதல் முதலான தோஷங்களிலிருந்து என்னை காப்பாற்றுங்கள்.

ஷக்தோனஷக்திம் தவஸ்தோது மாத்[3]யாது மீத்ருக்வஹம் கரோமீஷ: ப்ரபோ ||ஸ்ரீராக|| 46

தங்களை வணங்குவதற்கும், தியானம் செய்வதற்கும் எனக்கு தகுதியில்லை. ஆனாலும் சிறிது முயல்கிறேன்.

ஷட்வைரிவர்கம் மமாரான்னீராகுர்வ மந்தோஹரீராங்க்ரி ராகோஸ்துபே ı ||ஸ்ரீராக|| 47

பிரபுவே, என் அரிஷட்வர்கங்களை போக்குங்கள். ஸ்ரீஹரியின் பாத பத்மங்கள் மேல் எனக்கு அதிக அன்பு/பக்தி வரட்டும்.

சன்மார்க்க சச்சாஸ்திர சத்சங்க சத்பக்தி சக்ஞான சம்பத்தி மாதேஹி போ ||ஸ்ரீராக|| 48

சன்மார்க்கம், நற்சாஸ்திரங்களைப் படிப்பது, சஜ்ஜனர்களின் சகவாசம், குரு மற்றும் பெரியவர்களில் அதிக பக்தி, சிறந்த ஞானம் - என்னும் இந்த செல்வங்களை எனக்குக் அருளுங்கள்.

ஹாஸ்யாஸ்பதோஹம் சமானேஷ்ட கீர்த்யாத[1] வாங்க்ரிம் ப்ரபன்னோஸ்மி சம்ரக்ஷ போ ||ஸ்ரீராக|| 49

கெட்ட புகழை சம்பாதித்து, அனைவரின் கேலிக்கும் ஆளாகிறேன். தங்களின் பாதங்களை பணிகிறேன், என்னை காப்பாற்றுங்கள்.

லக்ஷ்மீவிஹீனத்வ ஹேதோ: ஸ்வகீயை: சுதூரீக்ருதோஸ்ம்யத்ய வாச்யோஸ்மிபோ ||ஸ்ரீராக|| 50

ஏழையாக இருப்பதால் உறவினர்களால் தூர விலக்கப்பட்டிருகிறேன். பலரிடம் திட்டு வாங்கியிருக்கிறேன்.

க்ஷேமங்க[1]ரஸ்த்வம் பவாம்போதி மஜ்ஜஜ்ஜனானாமிதித்வாம் ப்ரபன்னோஸ்மிபோ ||ஸ்ரீராக|| 51

சம்சாரம் என்னும் சாகரத்தில் மூழ்கியிருக்கும் மக்களுக்கு தாங்கள் அருள்கிறீர்கள் என்பதை அறிந்து நான் தங்களை வணங்குகிறேன் ஸ்வாமி.

கிருஷ்ணாவதூதேன கீதேன மாத்ரக்ஷராத்யேன கா[3]தா[4]ஸ்த வேனேட்[3]யபோ ||ஸ்ரீராக|| 52

அ-காராதி அக்ஷர மாலையினால் துவங்கும் இந்த ஸ்தோத்திரத்தினால், தாங்கள் கிருஷ்ணாவதூதரால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருக்கிறீர்கள், ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

மந்திராலயத்தில் வசிக்கும் பக்தர்களின் அபிமானி ராஜாதிராஜ ராகவேந்திர ஸ்வாமி குருசார்வபௌம கோவிந்தா, கோவிந்தா.



ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுவித்யேந்திர ஸ்ரீபாதங்களவர் மற்றும் ஸ்ரீ விஸ்வகுருப்ரிய ஸ்ரீபாதங்களவர், 2013ம் ஆண்டு ஜனவரியில் ஜகன்மாதா ஸ்ரீ க்ஷேத்திர கொல்லாபுர ஸ்ரீ மஹாலக்ஷ்மி சன்னிதிக்கு நடந்த சிறப்பு பாதயாத்திரையில் பங்கேற்றபோது எடுத்த படம்.



ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுவித்யேந்திர ஸ்ரீபாதங்களவர் 2014ம் ஆண்டு டிசம்பரில் ஜகத்பதி ஸ்ரீ க்ஷேத்திர திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமியின் சன்னிதானத்திற்கு நடந்த சிறப்பு பாதயாத்திரையில் பங்கேற்றபோது எடுத்த படம்.




ஸ்ரீ க்ஷேத்திர சோதே ஸ்ரீ வாதிராஜ மடத்தின் பீடாதிபதிகளான
ஸ்ரீ ஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வவல்லப ஸ்ரீபாதங்களவருக்கு (ஆண்டு 2015 ஆகஸ்ட்)
ஸ்ரீ வாதிராஜரின் சன்னிதியில் துலாபாரம் நடந்தபோது.




ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ சுவித்யேந்திர ஸ்ரீபாதங்களவருக்கு ஸ்ரீ வாதிராஜரின் சன்னிதியில்
(ஆண்டு 2011 டிசம்பர்) துலாபாரம் நடந்தபோது




உடுப்பியின் ஸ்ரீ பேஜாவர அதோக்ஷஜ மடத்தின் ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வேஷ தீர்த்த ஸ்ரீபாதங்
களவருக்கு ஸ்ரீ க்ஷேத்திர சோதேயில் ஸ்ரீ வாதிராஜரின் சன்னிதியில்
(ஆண்டு 2009 நவம்பர்) துலாபாரம் நடந்தபோது



உடுப்பியின் ஸ்ரீ பேஜாவர அதோக்ஷஜ மடத்தின் ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீ விஸ்வபிரசன்ன தீர்த்த
ஸ்ரீபாதங்களவருக்கு (இளையவர்) ஸ்ரீ க்ஷேத்திர சோதேயில் ஸ்ரீ வாதிராஜரின்
சன்னிதியில் (ஆண்டு 2009 நவம்பர்) துலாபாரம் நடந்தபோது



ஸ்ரீமத் பாவிசமீர ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளின்
மூல பிருந்தாவனம் - சோதே



கலியுக காமதேனு, கல்பதரு ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்
மூல பிருந்தாவனம் - மந்திராலயம்